திரு. செ. முத்துசாமி : தணிக்கை அறிக்கையின் பெயரால் ஏற்கெனவே வழங்கப்பட்ட ஊதியத்தை ஆசிரியர்களிடமிருந்து மீண்டும் பிடிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்குமானால், முன் கூட்டியே அவர்களுக்கு 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்து, இதை ஏன் உங்களிடமிருந்து பிடித்துக்கொள்ளல் கூடாது என்று 'நேட்சுரல் ஜஸ்டிஸ்' அடிப்படையில் கேட்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி முறையான 'ஜஸ்டிஸ்' அடிப்படையில் செய்யப்படாமல், கல்வித் துறையிலே அவர்களின் சம்பளத்தைப் பிடித்துக்கொள்ளக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையை மாற்றி, உரிய முறையிலே, நியாயம் வழங்கக்கூடிய முறையிலே 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்து அந்த அடிப்படையிலே அறிக்கை கொடுத்து அமுல் படுத்தி, விவரங்கள் பெற்றதன் பிறகு, அதற்கான அறிக்கை கொடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது குறித்துத் தனியாகக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : இதிலே இருக்கின்ற சிக்கல் தணிக்கை அறிக்கை என்பது மட்டுமல்ல, அரசாங்கத்தினுடைய கொள்கை என்றும் கருதுகிறேன். ஆகையால் கொள்கையளவில் அரசாங்கம் இந்தக் கொள்கையைத்தான் இந்த விஷயத்தில் கடைப்பிடிக்க வேண்டுமென்று வரையறுத்துவிட்டால், தணிக்கை அறிக்கை குறுக்கே வராது என்று நினைக்கிறேன். அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆகவேதான், சட்டத் துறையைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

Government High School, Thandarai.

* 23 Q. —THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of students studying in the Government High School at Thandarai (Pattabiram), Chingleput district;

(b) since how long a Headmaster was not posted to that school ; and

(c) the reasons for non-posting ?

1978 செப்டம்பர் 2]

அரசு உயர்நிலைப் பள்ளி, தண்டரை.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் தண்டரையில் (பட்டாபிராம்) உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தொகை எவ்வளவு?

(இ) அப்பள்ளிக்குத் தலைமை ஆசிரியர் எத்தனை மாதங்களாக நியமிக்கப் படவில்லை?

(உ) நியமிக்கப்படாமைக்கு காரணம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1,569.

(இ) 13—5—1977 இல் இருந்து.

(உ) 'பி' பிரிவு அரசிதழ் பதிவுப் பெற்ற தலைமையாசிரியர் நியமனத்திற்கான கருத்துருவை அரசு பரிசிலித்து தேர்ந்த பெயர் பட்டியலை அங்கிகரித்தது. 24—1—1978-ம் தேதி பள்ளிக் கல்வி இயக்குநரின் நடவடிக்கையில் தண்டரை அரசு உயர்நிலைப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியர் நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

திரு. க. அறிவழகன் : அந்தப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியரை நியமித்திருக்கிறார்கள். பாராட்டுகிறேன். ஆனால் அந்தப் பள்ளியில் 1969-லிருந்தே இரண்டாயிரம் மாணவர்கள் படிக்கின்றார்கள். அங்கு படிப்பதற்குப் போதிய வசதியில்லை. அந்த ஊரிலே பெண்கள் உயர்நிலைப் பள்ளி இல்லை. ஆகவே இதை இரண்டு பள்ளிகளாக்கி, பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட பள்ளிகளைப் பிரிக்கின்றபோது, இந்தப் பள்ளியினுடைய நிலைமையும் சேர்த்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : இந்தப் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்விற்கு ஆஜரானவர்கள் எத்தனை பேர்கள், அவர்களில் எத்தனை பேர்கள் தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : தண்டரை (பட்டாபிராம்) உயர்நிலைப் பள்ளியிலிருந்து நெருக்கடி நேரத்தில் 29—6—1977-ல் கணவனாகிய திரு. பால செல்வகணபதி என்ற இடைநிலை ஆசிரியரையும், அவருடைய மனைவியாகிய திருமதி திலகவதி என்ற இளநிலை எழுத்தரையும் சுண்ணாம்புக் குளத்திற்கும், ஆண்டார்குப்பம் என்ற இடத்திற்கும் மாற்றியிருக்கிறார்கள். ஆந்திராவுக்கு அருகில் உள்ளது. இன்னொன்று பாண்டிச்சேரிக்கு அருகிலே உள்ள ஊர். இப்படி வேறு வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பாண்டிச்சேரிக்குப் பக்கத்திலும் ஆந்திராவிற்குப் பக்கத்திலும் மாற்றியிருக்கிறார்கள். அதற்கு என்ன ?

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : கணவனும் மனைவியும் ஒரே ஊரிலே வேலை செய்ய வேண்டும் என்று அரசாணை இருக்கிறது. டி.ஈ.ஓ. வுக்கு 29—9—1977-ல் மனு செய்திருந்தும், இதுவரையில் அவர்களை பழையபடி மாற்றிப் போடாமல் இருக்கிறார்கள். இப்போது தண்டரை பள்ளியிலே ஆசிரியர் இடம் காலியிருந்தும், வேண்டுமென்றே வம்பு செய்து கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி சி.ஈ.ஓ. அவர்களுக்கு அமைச்சர் அவர்கள் தகவல் தந்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது தனிக் கேள்வியாகக் கேட்க வேண்டிய கேள்வி என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Higher Secondary Schools.

* 24 *Q.*—THIRU V. R. PERIANNAN and THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government, to appoint Graduate Librarians in the Higher Secondary Schools to be started under the two year new pattern of education, as in the case of schools under the Central Board of Education; and

(**b**) if so, the stage at which it now stands?